# உடன் பிறப்புகளை இணைத்த பாலம்!



கழகத்தை தாங்கிய தூண்,
தலைவரின் எண்ணத்தை
பறைசாற்றும் எதிரொலி.
உடன் பிறப்புக்களை
இணைக்கும் பாலம்.
"முரசொலி" யை வழி நடத்தியவர்;

வஞ்சகச் செயலால்
நஞ்சைப் பரப்பும்
பொய்யர் கூட்டத்து
பரப்புரை மத்தியில்;

கொள்கைப் பற்றுடன்
கழகத்துக் கருத்தினை,
நாளைய வரலாறாய்
இன்றைய செய்திகளை
மிளிரச் செய்தவர்;

அரசியல் சுமையை
தோளில் தாங்கி,
அன்பை என்றும்
இதயத்தில் ஏந்தி,
அரவணைத்துச் செல்லும்
பண்பாளரே;

உம் இழப்பு என்னும்
துன்பச் சுமையை,
தாங்க இயலாமல்
தவிக்கிறோம் நாங்கள்.



எம்.ஜாகீர் உசேன்

## திருச்செங்கோடு நகர இளைஞரணி சார்பில் பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

நாமக்கல், அக். 10 –

நாமக்கல் மேற்கு இளைஞர் அணி சார்பில் பயிற்சி பாசறைக் கூட்டம் திருச்செங்கோடு மேற்கு நகர பொறுப்பாளரும் முன்னாள் நகர மன்ற தலைவருமான ஆர். நடேசன் தலைமையில் நடைபெற்றது.

நகர இளைஞர் அணி அமைப்பாளர் கு.செங்கோட்டுவேல் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஜோயல், சென்னை வட கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன் ஆகியோர் கலந்து கொண்டு வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை வீடு வீடாகச் சென்று திண்ணைப் பிரச்சாரம் குறித்தும், நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதிகளில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் இணைந்து செயல்பட வேண்டும் என்பதை குறித்தும் விளக்கம் அளித்து பேசினர்.

கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மல்லை ஜெகதீசன், நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள், கார்த்தி, பாலாஜி, வார்டு அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

## செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், அக். 10

செம்பாக்கம் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, இன்று (10.10.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, ராஜேந்திர பிரசாத் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீவாரி திருமண மண்டபத்தில் பகுதிக் கழக அவைத் தலைவர் ஏ.வீரபத்திரன் தலைமையிலும், கே.பூபதி, எச்.பாஸ்கரன், சரஸ்வதி சந்திரசேகர் எம்.சி, டி.கார்த்திக் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே இக்கூட்டத்திற்கு மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், பாக முகவர்கள், BLA2, BDA முகவர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு செம்பாக்கம் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினின் சீரிய முயற்சியால் தமிழ்நாடு

## பொருளாதார வளர்ச்சிப் பாதையில் விண்ணளாவிய புகழ் பெறப் போவது உறுதி!

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, அக். 10–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சியால் நம் மாநிலம் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் விரைவில் விண்ணளாவிய புகழ் பெறுவது உறுதி என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.



தினகரன்

அக்டோபர் 9, 2025 வியாழக்கிழமை

தமிழகம்... ஏறுமுகம்

இந்தியாவில் அதிக தொழிற்சாலைகள் கொண்ட மாநிலமாக தமிழகம் திகழ்வதாக, தேசிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் கடந்த 2023-2024ம் நிதியாண்டிற்கான தொழில்துறை ஆய்வறிக்கையின்போது தெரிவித்திருந்தது. தமிழகத்தில் மட்டும் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. திமுக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் இது அபரிதமான வளர்ச்சியை பெற்றுள்ளது. அதாவது, இந்தியாவில் உள்ள மொத்த தொழிற்சாலைகளில் 15.43 சதவீதம் தமிழகத்தில் மட்டுமே உள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் கடந்தாண்டு ஜனவரி மாதம் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் பங்கேற்ற சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு 2 நாட்கள் நடந்தது. இதில், ரூ.6.64 லட்சம் கோடி மதிப்பிலான முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்மூலம் பல லட்சம் பேருக்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக

அது வருமாறு:–

இந்தியாவில் அதிக தொழிற்சாலைகள் கொண்ட மாநிலமாக தமிழகம் திகழ்வதாக, தேசிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் கடந்த 2023–2024ம் நிதியாண்டிற்கான தொழில்துறை ஆய்வறிக்கையின்போது தெரிவித்திருந்தது. தமிழகத்தில் மட்டும் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலை கள் இயங்கி வருகின்றன. தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் இது அபரிதமான வளர்ச்சியை பெற்றுள்ளது. அதாவது, இந்தியாவில் உள்ள மொத்த தொழிற்சாலைகளில் 15.43 சதவீதம் தமிழகத்தில் மட்டுமே உள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் கடந்தாண்டு ஜனவரி மாதம் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் பங்கேற்ற சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு 2 நாட்கள் நடந்தது. இதில், ரூ.6.64 லட்சம் கோடி மதிப்பிலான முதலீடு களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்மூலம் பல லட்சம் பேருக்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆசியாவின் டெட்ராய்ட் என கூறுமளவுக்கு தமிழ்நாடு, உலகின் மிகப்பெரிய வாகன உற்பத்தியாளர்களின் தாயகமாகவும் திகழ்கிறது.

மாநிலத்தில் தொழில்துறை, ஆட்டோமொபைல்கள், ஜவுளி, தோல், மின்னணுவியல் மற்றும் கனரக பொறியியல் போன்ற அதனை சார்ந்த துறைகள் வலுவான கட்டமைப்புகளுடன் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, சென்னை, கோவை, திருப்பூர் போன்ற நகரங்கள் ஆட்டோமொபைல், ஜவுளி மற்றும் பொறியியல் தொழில்களில் உலகளாவிய அங்கீகாரத்தை பெற்றுள்ளன. இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் மொத்த தானியங்கி வாகனங்களில் 40 சதவீதம் தமிழ்நாட்டில் இருந்துதான் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த நிதியாண்டில் 14.6 பில்லியன் டாலர் மதிப்புடைய மின்னணு பொருட்களை ஏற்றுமதி செய்து தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

மேலும், இந்தியாவிலேயே 11.19 சதவீத பொருளாதார வளர்ச்சியையும் தமிழகம் எட்டிப் பிடித்திருப்பது வரவேற்கத்தக்கது. அடுத்தக்கட்டமாக பாதுகாப்பு தொழிற்துறை வழித்தடத்திலும் தடம் பதிக்க உள்ளது தமிழ்நாடு. அதாவது, விண்வெளி தொழில்நுட்பத்துறையில் மிக முக்கியம் பகிக்கும் உயர்தர ஜெட் இன்ஜின் பாகங்களில் இருந்து, ட்ரோன்கள் வரை தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட உள்ளது. இதற்காக கோவை அருகே 360 ஏக்கரில் பாதுகாப்பு தொழிற்துறைப்பூங்கா அமைக்கப் பட உள்ளது. மேலும், சூலூரில் 200 ஏக்கர் பரப்பளவில் விமானம் பழுது நீக்குதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வதற்காக ஓடுதள அணுகு வசதியுடன் கூடிய வான் வெளிப் பூங்கா அமைய உள்ளது குறிப்பிடத்தக்கது. வளர்ச்சியின் தொடர்ச்சியாக கோவையில் இன்றும், நாளையும் உலக புத்தொழில் மாநாடு நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டில் சுமார் 39 நாடுகளில் இருந்து 254 பங்கேற்பாளர்கள், முன்னணி ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்கின்றனர். இந்தியாவிலேயே முதல்முறையாக இந்த மாநாடு நடத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது. மாநாட்டை துவக்கி வைக்க உள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், ரூ.126.12 கோடியில் தங்க நகை பூங்கா அமைக்கும் பணிக்கும் அடிக்கல் நாட்ட உள்ளது குறிப்பிடத்தக்கது. இம்மாநாடு மூலம் ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் வருகை தமிழகத்தில் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதல்வர் மு.க.ஸ்டாலினின் சீரிய முயற்சியால், நம் மாநிலம் பொருளாதார வளர்ச்சிப்பாதையில் விரைவில் விண்ணளாவிய புகழ் பெறும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் உள்ள திருவீதி அம்மன் கோவில் தெருவில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி பெ.மணிமாறன் உத்தரவின் பேரில் பாதாள சாக்கடை மூடிகள் உயர்த்தி அமைக்கப்பட்டது. உடன் கழிவுநீர், குடிநீர் வாரிய உதவிசெயற்பொறியாளர், ஊழியர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# கொள்கைக் கீதமிசைத்த கோபாலபுரக் கோகிலம்!





கொட்டு மேள முழக்கமும், குழலூதும் நாதஸ்வர ஓசையும், கோயில் திருவிளக்கமும், திரண்டெழு திருவிழாக்களும், நாள்தோறும் நடை தேர் நறுமணம் பேசும் ஊர்!

திருவாரூர் ஆன்மீகத்தின் அறநெறி பரப்பிய ஊர்களில் ஒன்று!

தியாகராஜர் தினவெடுத்து நிற்கும் தீர்த்த கரையான திருவாரூர் எனும் ஆன்மீக ஆல நிழல் பரப்பிய அறநெறி பூத்துக் குலுங்கும் சிவத்தலங்களில் ஒன்று!

அப்பரும், சுந்தரரும், ஞானசம்பந்தருமான மும்மூர்த்திகள் புழங்கிய புண்ணிய தலம் என்பர்! "ஆழித்தேர்" ஓடிய அந்தத் திருக்கோயில் ஆரூர் மண்ணில் தான்; பெரியாரும் அண்ணாவும், கலைஞரும் பகுத்தறிவுப் பாதைக்குப் பவள மல்லிகைகள் தூவிப் பதியம் போட்டனர்.

நெஞ்சை ஈர்க்கும் தேவாரப் பதிகப் பாடல் பெற்ற தலங்களில் ஒன்று. பூபாளம் பாடி வரும் பொன்னி ஆற்றுக் கரை ஆலயங்களில் 123 ஆவது புகழ்த்தலம் எனச் சிறப்புப் பேறும் உண்டு. நெற்களஞ்சியம் என அழைக்கப்படும் பசுமைப் பூத்த பகுதியான காவிரித் தென்கரை தெம்மாங்கு பாடும் திருத்தலம் என்பாரும் உண்டு!

கடவுளைத் தேடித் தேடி அலையும் பக்திமார்களுக்குப் பிரம மபுரீஸ்வரர் சுயம்பு மூர்த்தியாக அருள் தரும் ஞானபூமியாம் திருவாரூர் என்பதும் உண்டு!இப்படியான பல்வேறு அடையாளங்களை ஆன்மீகவாதிகளால் முத்திரை பதிப்பதும் ஆரூருக்கு உண்டு!

அங்கேதான் நாத்திகப் பகுத்தறிவுச் செடி வேரை நட்டு வைத்தார் பெரியார்! பூந்தோட்டத்தில் புகுந்த பூந்தென்றலாய் பேரறிஞர் அண்ணா மறுமலர்ச்சிப் பாதையைப் பதியம் போட்டார்!

அடிக்கடி அங்கு ஆகமப் பூகம்பங்கள் பூத்துக் குலுங்கும் போதும்; திருவிழாக் காலங்களில் பரப்புரைப் புயல் தாக்குதல் நடத்திய போதும்; நகராமல் நாத்திக நாணல்கள் நடனமாடி நட்டுவாங்கம் செய்திருக்கின்றன!

அங்கேதான் திருக்குவளை மண்ணும் திருவாரூருக்கு இடம்பெயர்ந்தது. கலைஞர் என்ற காவிய நாயகன் அவதாரம் எடுத்தார்!

பெரியாரின் வருகையால் ஆன்மீக இருட்டு மண்டபம் இடிந்து விழுந்தது. எட்டுத் திசையும் பகுத்தறிவொளி பரப்பி வென்றது! கருத்துக் கடல் அலையாய்ப் பசி எடுக்க, மின்சாரப் பாய்ச்சலாய் மனித மின்னல்கள் இறங்கி மேய்ந்தன! அண்ணாவின் அறிமுகத்தால் அறிவுக் கடல் நீச்சல் பழக்கியது.

நாவுக்கரசரின் நா முழக்கங்கள் கேட்ட ஊரில்தான்... சுந்தரரின் சுந்தரத் தமிழ் சுடரொளி பரப்பிய ஊரில் தான்.... ஞான சம்பந்தரின் ஞான உபதேசங்கள் பரப்புரை செய்த ஊரில் தான்..... திராவிட இயக்கத் தலைவர்கள் ஆன பெரியாரும், அண்ணாவும் பிரவேசம் செய்தனர். அவர்களால் கலைஞரோ நாத்திக அவதாரம் எடுத்தார். நாதியற்ற தமிழ் இனத்திற்கும்,நற்றமிழுக்கும் சிறகு முளைக்க சித்திர வலம் வந்தார்.




கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்


திருவாரூர் தீர்க்கதரிசியான கலைஞரின் குடும்ப உறவில் பூத்த உறவுகளில் இரு சகோதரிகள். அவர்களில் ஒருவர் சண்முக சுந்தரத்தம்மாள். அவரின் புதல்வர்கள் முரசொலி மாறன், முரசொலி செல்வம். மற்றொரு சகோதரியின் மகன் அமிர்தம். அவர்களைத் தோளிலும், மடியிலும் கிடத்தி, தன் மூச்சினை ஊட்டி; திராவிட இயக்கக் கொள்கைப் பால் புகட்டிக் தொண்டர்களாக உலவ விட்டு, உற்சாகக் கனல் மூட்டியவர் கலைஞர்.

சட்டம் பயின்றவர் என்றாலும் கழக அரசியலை சட்டமாக்கிக் கொண்டவர். அண்ணாவால் "செல்வா....! செல்வா..!" என்று செல்லமாக அழைக்கப்பட்ட ஆரூர் செல்லக்கிளி செல்வம்!

வெள்ளைச் சட்டை, கருப்புப் பேண்ட், டை கட்டி கோட்டும், சூட்டும் மாட்டி நீதிமன்றம் போக வேண்டிய அவர்; தமிழ்ச் சாதியைக் காப்பதற்கு மக்கள் மன்றத்திற்காகக் கலைஞரின் அடிச்சுவட்டில் பயணம் செய்தவர்.

"இனியவன் என் செல்வம்" என்ற கலைஞருக்குத் தன் அண்ணன் முரசொலி மாறனைப் போல், சிறு வயது முதல் முரசொலியைத் தோளில் போட்டுத் தூக்கிச் சுமந்து உதவியாக இருந்தவர்.

அவரை வளர்த்து ஆளாக்கிய ஆசானாக இருந்தவர் கலைஞர். எனினும் அவரிடத்தில், நித்தம் நித்தம் கண்டிப்புக்குள் கல்லடிப்பட்ட கனிமரமாகப் பழுத்தவர். பத்திரிக்கை உலகில் வசிட்டரான கலைஞரிடத்தில் அர்ஜுனாகப் பயிற்சி எடுத்தவர். மாறன், அமிர்தம், அழகிரி, ஸ்டாலின், தமிழரசு என பின்னிப் பிணைந்து தேக்கு மரமாக வளர்ந்து கிளை பரப்பியவர்.

கலைஞரின் மடி தவழ்ந்த அன்பு மகளார் செல்வியை மண முடித்த முத்தமிழ்த் தலைவர் மனக்குடிலில் வசித்து வந்த மருமகன் தான்.

முரசொலி அலுவலகத்தில் ஒரு லுங்கியைக் கட்டிக்கொண்டு, பனியனை மாட்டிக் கொண்டு, அச்சுக்களிம்பு (கிரீஷ்) ஏறிய உடைத்துணிகளோடு ஓடும் அச்சுயிடும் எந்திரத்தில், எழுத்துக்களை அச்சு கோத்துச் சரி பார்த்தல், பெட்டிச் செய்தி எழுதுதல், செய்திகளுக்குத் தலைப்பிடுதல், மீண்டும், மீண்டும் பிழை திருத்துதல், சந்தாதாரர் முகவரி பட்டியல் தயாரிப்பைச் சரி பார்த்தல், முழுதும் முடிந்த செய்தி தாங்கி வெளிவந்த முரசொலியை அனுப்பி வைத்தல் என்பன போன்ற பணிகளில் அவர் கடைநிலை ஊழியனாகவே இருந்து செயல்பட்டு வந்திருக்கிறார்.

ஒரு சின்ன ஆளு உலகத்தில் அவர் செய்த பணியோ பெரிது! பிழைகள் பொறுக்காத கலைஞரிடம் நெருப்பில் வெந்த தங்கமாகவே வாழ்ந்து மின்னி மறைந்திருக்கிறார்.

தேர்தல் காலங்கள் முதல் திரைப்படம் துறை வரை கால் பதித்த சுயமரியாதைச் சுடர் அவர்!

கழக வளர்ச்சிக்காகத் தளபதிக்குத் தோளோடு தோள் நின்ற நாயக்கர் மஹால் தூணும் அவரே! புயலிலும், மழையிலும் தாக்குதல் கண்டு வரும் தளபதிக்கு ஆறுதல் தந்த புன்னை மர நிழல் அல்லவா?

பத்திரிக்கைப் பணியில் பல்கலைக்கழகமாக விளங்கிய கலைஞர் கைபடும் பாடப்புத்தகங்களில் ஓர் அத்தியாயமாக இருந்தவர்.

வடிவமைப்பு செய்து இரவு பகலாக ஊர்க் குருவி போல் பறந்து, பறந்து வேலை செய்தவர்.

வி.பி. சிங்கின் ஒன்றிய அமைச்சரவையில் முரசொலி மாறன் பதவி ஏற்ற பின்னர், முரசொலியின் நிருவாக ஆசிரியர் பொறுப்பை ஏற்றார் செல்வம். அவரது வைரம் ஏறிய எழுத்துக்கள், மற்றவர்களுக்கு வாசிக்கும் உந்து சக்தியாகவே அமைந்தது.

நெருக்கடிக் கால நெருப்பாற்றின் கலைஞருடன் பயணப்பட்டவர். முரசொலி மாறனும் தளபதியும் காராக்கிரகத்தில் தழும்புகள் ஏற்றபோதும், தணிக்கைக் குழுத் தண்டனையில் தப்ப முரசொலிக்கு முத்திரை பதித்தவர்;

அண்ணா சாலை மேம்பாலத்தில் இருந்து, அண்ணா சிலை வரை அவரும், மு.க.அழகிரி, மு.க.தமிழரசு, செல்வி எனச் சர்வாதிகாரத்தை எதிர்த்து ஜனநாயகம் காக்கும் சுதந்திரப் போரில் நின்றவர்கள். துண்டுப் பிரசுரங்களை ஏந்தி, ஒவ்வொரு கடை, கடையாக, பேருந்தில் ஊர்திகளில் வந்தவர்களிடம் கருத்துரிமை வேலையை செய்தவர்கள்.

"சர்க்காரியா கமிஷன்", "முரசொலி சில நினைவலைகள்" ஆகிய நூல்கள் எழுதியும் மண்டூகங்களுக்கு மடை விளக்கம் தந்தவர். அவரது சிலந்தி வலை அரசியல் பின்னலில் சிக்காதவர்கள் யாரும் இல்லை! தப்பியவர்களும் தரணியில் இல்லை!

நெருக்கடிக் கால கட்டத்தில் வன்முறையாளர்களால் முரசொலி தீக்குளித்தது. தீய சக்திகளின் சவால்களை ஏற்றுக் கொண்டு ஒரு தாயின் பங்களிப்பைச் செய்து காப்பாற்றிய செவிலித்தாய் அவர்!

ஆட்சியாளர்கள் அத்துமீறலைக் கண்டு அஞ்சாமல், சட்டமன்றக் கூண்டிலேறி சண்டமாருதமாக முழங்கியவர். "கூண்டு கண்டேன்! குதூகலம் கொண்டேன்!" என்று கலைஞரால் வர்ணிக்கப்பட்டவர்.

பாலைவன ரோஜாக்கள் படத்தில் பட நாயகன் சபாரத்தினம் உயிரை விடும்போது, இறுதிக் காட்சியில், தனது பேனாவை இளைய தலைமுறைக்குப் பத்திரிக்கைப் பணியாற்ற ஒப்படைப்பார். அது போல இன்றைக்கு பல எழுத்தாளர்களுக்குத் தனது எழுதுகோலை ஒப்படைத்து விட்டு சென்றிருக்கிறார் என்று தளபதி தன் இரங்கற்பதிவில் முத்திரையாகப் பதிவு செய்துள்ளார்.

"மூத்த பிள்ளை முரசொலி என் வளர்ச்சிக்கு உறு துணையாக இருந்தது மட்டுமல்ல; சிறு வயது முதல் அண்ணனாக என் சகோதரி செல்வியின் கணவர் எனும் மைத்துனராக பத்திரிக்கைப் பயிற்சி தந்தவராக கலைஞரின்மாறாப் பற்றுடைய மருமகனாக இருந்த கொள்கைத் துணை இழந்து நான் நிற்கிறேன்; தலைவர் கலைஞருக்குப் பிறகு, நான் சாய்வதற்குக் கிடைத்த கடைசித் தோளை இழந்து வாடுகிறேன்" என்று நமது நெஞ்சையெல்லாம் உருக்குகின்ற இரங்கல் திருவாசகத்தைத் தந்தவர் தளபதி அவர்கள்.

பழகுவதற்கு எளிமை; புத்தகங்கள் படிக்கும் வேட்கை; தரவுகள் சேகரிப்பு; நண்பர்களை வரவேற்கும் உபசரிப்பு; வீட்டில் குடும்ப உறவினர்களை அன்பொழுகப் பழகுதல் என இயக்கத்துக்கு தூண்!அன்பும்,பண்பும் வற்றாத ஞானக் கங்கை என்று இருந்த அவர்; எரிகாட்டில் கொள்கைச் சாம்பலாக மணந்துக் கொண்டிருக்கிறார்!

செல்வம் எழுதிய பனிமலைக் குழம்பில் எரிமலைகள் குளித்திருக்கின்றன. அவரின் பேனா மையால் நையாண்டியும், நகைச்சுவையும் நிரம்பி வழிந்தன. அவரின் கருத்து மழையில் நனைந்த கொள்கைவாதிகள் ஏடு கண்டு ஆனந்த துண்டுகளால் துவட்டியிருக்கிறார்கள்.

அன்றாட அரசியலுக்கு அச்சாணியாய் விளங்கியவர். ஆர்ப்பாட்டம் எடுத்து, அநீதி பரப்பிய அரசியல்வாதிகளின் உச்சந் தலையில் தனது எழுத்தாணியை இறக்கியவர்.

அவர் சிலந்தி எனும் பேரில் எழுதிய கட்டுரைகள் மூலம்அரசியல் எதிரிகள் எவரும் தப்ப முடியாது! கல்லாக இருந்த பலரை; செல்வத்தின் விரல்கள் பட்டு அவர்களை சிலையாக செதுக்கியது. பலர் வெற்று தாளாக இருந்தார்கள்; அவர்களை வண்ண ஓவியம் குழைத்துச் சித்திரமாக தீட்டியது செல்வத்தின் பொன் விரல்கள்! பலர் திசை தெரியாமல் இருந்தபோது, தடம் பதிக்க அவர் ஊன்று கோலாக இருந்திருக்கிறார்.

சிலந்தியின் சீண்டல் கண்டு சிறு நரிகள் ஓலமிட்டு ஓடின. ஆளுபவர்களுக்கு அறிவுத் தூண்டலைத் வார்த்தது!

அச்சு ஊடகங்களில் தந்த அவரது எழுத்துக்களால், நச்சு உண்ணிகள் நாண்டு செத்தன. அவரோ எழுத்து உலகில் அழியா அருங்காட்சியகம்!

தாகம் தீர்க்காத தண்ணீர் பந்தல் அல்ல அவர்; தமிழர்களின் மடியில் விழுந்த தங்க புதையல்!

அதிர்ந்து பேசாத அரசியல் ஞானம் பெற்றவர். எனினும் ஆழமான கொள்கையில் நீச்சல் பழகியவர். அவர் அடக்கமுடையவர் தான் : ஆனால், ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளுக்கு அஞ்சாத அடலேறு!

மாணவர்ப் படை எழுச்சியில், மொழி, இனப் போராட்ட அணி வகுப்பு நட்புகளில் செல்வம் கொண்ட அரசியல் அரும்புகளாய், நரம்புகளாய், பின்னி, பிணைந்து முளைத்தவர்கள் பலருண்டு!

துரைமுருகன், இரகுமான் கான், வை.கோபால்சாமி, கள்ளக்குறிச்சி வேங்கடபதி, வேலூர் முகமது சகி, கரூர் நல்லியண்ணன், புதுக்கோட்டை உடையப்பன், அறந்தாங்கி இராமநாதன், நாமக்கல் வீரப்பன், ஈரோடு கணேசமூர்த்தி, இப்படியான திராவிட இயக்கக் கட்டுமானங்களில் சட்டக் கல்லூரி மூலங்களாக விளங்கியவர்கள்.

கலைஞரின் மனச்சாட்சியான மாறனின் இளவல், செல்வியின் கணவர், கலைஞரின் அணுக்கத் தொண்டர்களான செயலாளர்கள் கோ.சண்முகநாதன், இந்திய ஆட்சிப் பணியாளர் இராஜமாணிக்கம், போன்றோரின் நட்பு பரிமாற்ற வளையத்தில் அடிக்கடி வலம் வந்தவர். பணியாளர்களிடத்தில் பாசம் காட்டிச் செய்திப் பந்தி பரிமாறியவர்.

எனக்குத் தினமும் மயிலிறகாக மனம் வருடும் கோபாலபுரத்தென்றலாகவும், இயக்கத்தின் இமயமலைத் தேனாகவும், சாவின் மடியில் துயிலும் முன்னிரவு வரை, செய்திப் பரிமாற்றத் தகவல் பதிவுச் சேமிப்புகளில், செல்போனில் தொப்புள் கொடி உறவாக இருந்தவர்.

முரசொலியில் பணிபுரிந்த அந்நாள்களில் தளபதிக்குச் செய்தித்தாள் பணியை கற்றுக் கொடுத்த வசிட்டர் அண்ணன் செல்வம். "குட்டி அத்தான்" என்றும், "மூத்த அண்ணன்" என்றும் அன்பாக ஆரத்தழுவித் தளபதியால் அழைக்கப்பட்ட முரசொலி செல்வம் அவர்களின் சிலை திறப்பு விழாவும், அவர் எழுதிய சில கட்டுரை தொகுப்பு நூல்வெளியீட்டு விழாவும் நடைபெற்று முடிந்தன.

முரசொலி அறக்கட்டளை சார்பில், ஆண்டுதோறும் "முரசொலி செல்வம்" பேரால் விருது ஒன்றை ஏற்படுத்தி, இந்தாண்டு மூத்த ஊடகவியலாளர் ஏ.எஸ்.பன்னீர் செல்வன் அவர்களுக்குக் கரூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் வழங்கப் பட்டுள்ளது.

அவர் மறைந்தார் ஆனால், இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்! என்றும் அவர் நம் நெஞ்சங்களில் இருப்பார் அவர் பிடித்த பேனா நம் கையில் இருக்கிறது! அவர் நம்மிடம் ஒப்படைத்து விட்டுச் சென்ற படைக்கலன்கள் மூன்று : ஒன்று கொள்கை முரசான முரசொலி! இரண்டு எத்தனை அச்சுறுத்தல்கள் வந்தாலும், ஆர்த்தெழும் கொள்கைக்கான விடாமுயற்சி! மூன்று: எவருக்கும் தலைதாழாமல் இழக்காத எழுதுகோல்!

வாழ்க அண்ணன் முரசொலி செல்வம்! ஓங்குக அவரது புகழ்!